# මැතිවරණ නීති,
# වැරදි හා දඬුවම්

## தேர்தல் சட்டங்கள், தவறுகள்
## மற்றும் தண்டனைகள்



CaFFE

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මැතිවරණ නීති,
# වැරදි හා දඬුවම්

නීතිඥ එස්.ජී. පුංචිහේවා

දෙමළ පරිවර්තනය : එස්. සිවගුරුනාදන්

**නිදහස් හා සාධාරණ මැතිවරණයක් සඳහා වූ ජනතා ව්‍යාපාරය**

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்

Campaign for Free & Fair Elections

CaFFE 100/19, Walikada Waththa Road, Rajagiriya. Tel. 060 2188106 E-mail caffe2008@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පටුන


## I. ඡන්ද වැරදි

ප්‍රජා අයිතිය නැති වූ අයට
ඡන්ද පොළ අසල වැරදි හැසිරීම්
පෙරහැර පෙළපාලි පැවැත්වීම
මහජන රැස්වීම් පැවැත්වීම
වැරදි කිරීමට තැත් කිරීම
අපේක්ෂකයන් නොවන අයගේ ඡන්ද කටයුතු
මැතිවරණ කාර්යාල ගණන
කාර්යාල පැවැත්විය යුත්තේ කව්රුන් විසින්ද?
කාර්යාලය පැවැත්විය යුතු කාල සීමාව
ඡන්ද ඉල්ලීම්
රහස්‍යභාවය රැකීම

## II. දූෂණ ක්‍රියා

හොර ඡන්ද දැමීම
සංග්‍රහ කිරීම
අයුතු බලපෑම
අල්ලස් දීම
දූෂණ ක්‍රියා ගැන දඬුවම

## III. නීති විරෝධී ක්‍රියා

අසත්‍ය ප්‍රකාශ පළකිරීම
ගෙවීමකට මැතිවරණ වැඩට ගැනීම
නීති විරෝධී ක්‍රියාවලට දඬුවම




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. වෙනත් කරුණු

ඡන්ද පෙත්සම්
ඡන්දය දීමට යාම සඳහා නිවාඩු
ඡන්ද මධ්‍යස්ථානයට ඇතුළු විය හැකි අය
ඡන්ද පොළ නියෝජිතයෝ
ඡන්ද විමසීම ආරම්භයට පෙර
ඡන්ද පත්‍රිකා
ඡන්ද දායකයන්ට සහායවීම
ඡන්ද විමසීම අවසන් කිරීම
ඡන්ද විමසීම් අවසන් විට
ඡන්ද ගණන් කරන ස්ථාන නියෝජිතයෝ
ඡන්ද ගණන් කිරීම

# පෙරවදන

නිදහස්වූත්, සාධාරණවූත්, මැතිවරණ භාවිතයක් තිබිය යුත්තේ පොදු මිනිසාගේ අයිතිවාසිකම් ආරක්ෂා වීමටය. ජනතාවගේ කැමැත්තට සැබෑ වටිනාකමක් ලැබෙන්නේ එවිටය. මානව අයිතිවාසිකම් ප්‍රකාශනයේ එම අදහස ප්‍රකාශ වන්නේ එහි 21 වන වගන්තියෙනි. ඒ මෙසේය.

1. තමන්ට ම හෝ නිදහස් ලෙස තෝරා ගැනුණු තම නියෝජිතයන් මගින් හෝ සිය රටේ රාජ්‍ය පාලනයට සහභාගිවීමේ අයිතිය හැමදෙනාටම ඇත.
2. තමරටේ රාජ්‍ය පාලනයට පිවිසීමේ සමාන අයිතියක් හැම කෙනෙකුටම ඇත.
3. පොදු ජනතාවගේ කැමැත්ත පාලන අධිකාරයේ පදනම විය යුතුය නියත කාල පරතරයන්හි අව්‍යාජ ලෙස පැවැත්වෙන ඡන්ද විමසීම්වලදී සමාන සර්වජන ඡන්ද සමාන නිදහස් ඡන්ද විමසීම් මගින් හෝ මේ කැමැත්ත ප්‍රකාශ විය යුතුය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජනතාවගේ එම අයිතිවාසිකම් ආරක්ෂා කිරීමට අප රටේ මැතිවරණ කොමසාරිස් ධූරයක් මැතිවරණ මහලේකම් කාර්යාලයක් සහ මැතිවරණ නීති රීති රාශියක් ඇත. එහෙත් ඒ සියල්ලම ඉක්මවා මැතිවරණ සම්බන්ධ වැරදි ද සිදුවේ.

මේ පොත් පිංචෙන් එම වැරදි හා අදාළ දඬුවම් ගැන දැනුවත් බවක් දීමට උත්සාහ ගැනේ. එය මැතිවරණ සම්බන්ධ සියලුම ආකාරයේ ක්‍රියාකාරීන්ටත්, පොදු ජනතාවටත් ප්‍රයෝජනවත් වනු ඇත.

## මැතිවරණ නීති වැරදි හා දඬුවම්

අපට ඡන්දය දීමට අවස්ථාව සැලසෙන මැතිවරණ වර්ග කීපයක් හා ජනමත විචාරණ ද ඇත. මේහැම මැතිවරණයකදීම නීතියෙන් දඬුවම් ලැබිය හැකි වැරදි ක්‍රියා ඒ ඒ පනත්වල සඳහන් වේ. 1981 පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ එවැනි දඬුවම් ලැබිය හැකි වැරදි වර්ග තුනක් දක්වා ඇත. වැරදි දූෂණ ක්‍රියා, නීති විරෝධී ක්‍රියා යනුවෙනි. අනෙක් මැතිවරණ හා ජනමත විචාරණය සම්බන්ධයෙන්ද එම වැරදි පොදු ලෙස සඳහන් වේ. පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ එම වගන්ති අංක සහිතව මෙසේ දැක්විය හැකිය.

ඡන්ද වැරදි - 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76
දූෂණ ක්‍රියා - 77, 78, 79, 80, 81, 82
නීති විරෝධී ක්‍රියා - 83, 84, 85, 86, 87, 88, 89, 90

මේවා මෙසේ වර්ග කොට ඇත්තේ එම වැරදිවලට නියමිත දඬුවම්වල හා නීතිමය ප්‍රතිඵල වල වෙනස්කම් නිසාය.

ඉහත සඳහන් වැරදි ක්‍රියා සෑම ඡන්ද ක්‍රියාවකට අදාළ වේ. ඒ සම්බන්ධ පනත් මෙසේය. පනතේ කෙටි නම වරහන් තුල දැක්වේ.

1981 අංක 1 දරණ පාර්ලිමේන්තු මැතිවරණ පනත (පාමැති)
1981 අංක 15 දරණ පාර්ලිමේන්තු මැතිවරණ පනත (ජනාධි)
1988 අංක 2 දරණ පළාත් සභා ඡන්ද විමසීම් පනත (පළාත්)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

262 අධිකාරය පළාත් පාලන ආයතන ඡන්ද විමසීම් ආඥා පනත (පපා)
1981 අංක 7 දරණ ජනමත විචාරණ පනත (ජවිච)

පහසු පිණිසම එම වැරදිවල හරය පමණක් මෙහි දක්වමු. ඒ සමග එක් එක් පනත්වල වගන්ති අංකයද සඳහන් වේ. එවිට ඕනෑම ඡන්ද විමසීමකට මෙය අදාළ කරගත හැකිය. වගන්තියක් නැතිවිට ''නැත'' යන්න සඳහන් වේ.

## ඡන්ද වැරදි

නාම යෝජනා පත්‍රයක් කූට ලෙස පිළියෙල කිරීම, විරූප කිරීම, වංචනික ලෙස විනාශ කිරීම, වෙනත් ලේඛනයක් දැනුවත්ව තේරීම්භාර නිලධාරියාට භාරදීම.

(පා මැති 66 අ) (පළාත් 66 අ) (ජනාධි 66 අ)
(පපා 78 (1) අ) (ජවිචා නැත)

ඡන්ද පත්‍රිකාවක නිල ලකුණ කූට ලෙස පිළියෙල කිරීම, හොර පත්‍රිකා සෑදීම වංචනික ලෙස විරූප කිරීම හා වංචනික ලෙස විනාශ කිරීම.

(පා මැති 66 ආ) (පළාත් 66 ආ) (ජනාධි 66ආ)
(පපා 78 (1) ආ) (ජවිචා 43 අ)

නිසි බලය නැතිව ඡන්ද පත්‍රිකා සැපයීම ඡන්ද පත්‍රිකා විකිණීම හෝ මිළදී ගැනීම

(පා මැති 66 ඇ හා ඈ)
(පළාත් 66 ඇ හා ඈ) (ජනාධි 66 ඇ හා ඈ)
(පපා 78 (1) ඇ හා ඈ) (ජවිචා 43 ඇ හා ඈ)

ඡන්ද පොළ තුළදී ලකුණු කළ ඡන්ද පත්‍රිකාවක් වුවමනාවෙන්ම ප්‍රදර්ශනය කිරීම.

(පා මැති 66 ඇඇ - 1988/15 සංශෝධන පනතේ 19)
(පළාත් 66 ඉඉ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

නීතියෙන් හිමිකම් නැතිව සිටියදී නිල ලකුණ සහිත ඡන්ද පත්‍රිකාවක් තමන් වෙත ලබා ගැනීම.

ඡන්ද දායකයෙකු ඡන්ද පෙට්ටියට ඡන්ද පත්‍රිකාවක් නොවන වෙනත් දෙයක් දැමීම.

(පා මැති 66 ඊ) (පළාත් 66 ඊ) (ජනාධි 66 ඊ)
(පපා 78 (1) ඊ) (ජවිචා 43 ඊ)

ඡන්ද පෙට්ටියක්, ඡන්ද පත්‍රිකා පැකට්ටුවක් නීතියෙන් බලය නැතිව විනාශ කිරීම, ලබාගැනීම, විවෘත කිරීම හෝ වෙනත් යමක් කිරීම.

(පා මැති 66 ඌ) (පළාත් 66 ඌ)
(ජනාධි 66 ඌ) (පපා 78 (1) ඌ)

මැතිවරණයකදී නිසි බලය නැතිව ඡන්ද පත්‍රිකා මුද්‍රණය කිරීම.

(පා මැති 66 ඍ) (පළාත් 66 ඍ) (ජනාධි 66 ඍ)
(පපා 78 (1) ඍ) (ජ විචා 43 (ඌ)

ඡන්ද පෙට්ටියකින් ඡන්ද පත්‍රිකා ඉවතට ගැනීමට ඇතුළේ තිබියදී විවෘත කිරීමට යන්ත්‍රයක් හෝ සූත්‍රයක් මැතිවරණ අවස්ථාවකදී තැනීම, පිටරටින් ගෙන්වීම, සන්තකයේ තබා ගැනීම, සැපයීම, පාවිච්චි කිරීම හෝ එම කාර්යයන්ට ඉඩ සැලසීම.

(පා මැති 66 ඎ) (පළාත් 66 ඎ) (ජනාධි 66 ඎ)
(පපා 78 (1) ඎ) (ජ විචා 43 ඎ)

තැපැල් කාර්යාලයේදී අනන්‍යතාවය ගැන බොරු ප්‍රකාශ කිරීම.

(පා මැති 66 ඕ) (පළාත් 66 ඍ) (ජනාධි 66 ඕ)
(පපා නැත) (ජ විචා 43 ඎ)

තැපැල් ඡන්ද දායකයෙකුවීමට කර ඇති ඉල්ලීමක් අනන්‍යතා ප්‍රකාශයක්, ආවරණය කල ලියුම් කවරයක්, තැපැල් ඡන්ද පත්‍රිකා කවරයක් නිසි බලය නැතිව විවෘත කිරීම, විනාශ කිරීම එයට යමක් එකතු කිරීම්.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(පා මැති 66 ඕ) (පළාත් 66 ච) - (ජනාධි 66 ඕ)
(පපා නැත) (ජ විචා 43 ඕ)

නිල ඡන්ද දැන්වීම් පත්‍රිකාවක් ලෙස පෙනෙන හෝ සැලකිය හැකි යමක් බලය නැතිව මුද්‍රණය කිරීම්.

(ප මැති 66 ක) (පළාත් 66 ක) (ජනාධි 66 ක)
(පපා නැත) (ජ විචා 43 ඕ)

ඡන්ද විමසන අවස්ථාවකදී ඡන්ද දායකයෙකු වරදවා වටහාගනු ලැබිය හැකි ලකුණක් හෝ දෙයක් තැබීම්.

(පා මැති 66 ග) (පළාත් 66 ග) (ජනාධි 66 ග)
(පපා නැත) (ජ විචා 43 ක)

ඡන්ද විමසන අවස්ථාවකදී ඡන්ද දායකයෙකු සම්බන්ධයෙන් තබන ලද උචිත ලකුණක් නිසි බලය නැතිව වංචනික ලෙස විරූප කිරීම්.
(පා මැති 66 ච) (පළාත් 66 ච) (ජනාධි 66 ච)
(පපා නැත) (ජ විචා 43 ග)

ඡන්දය දීමට නීත්‍යානුකූලව නුසුදුස්සෙකු සිටියදී ඒ බව දැන දැන ඡන්දය දීම්.

(පා මැති 66 ජ) (පළාත් 66 ජ) (ජනාධි 66 ජ)
(පපා නැත) (ජ විචා නැත)

ඉහත සඳහන් වැරදිවලට දෙන දඬුවම්වල වෙනස්කම්ද සමානකම්ද ඇත.

පාර්ලිමේන්තු මැතිවරණය, ජනාධිපතිවරණය සහ ජනමත විචාරණයේදී මහාධිකරණය විසින් තීන්දු කරනු ලැබේ.

I. අවුරුදු දෙකට අඩු බන්ධනාගාර ගත කිරීම.
II. අවුරුදු හතකට ප්‍රජා අයිතිය අහෝසිවීම.
III. මන්ත්‍රීවරයෙකු නම් මන්ත්‍රීකම අහෝසිවීම වේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පළාත් සභා මැතිවරණ වරදකදී මහේස්ත්‍රාත් අධිකරණය විසින් තීන්දු කරනු ලැබේ.

I. අවුරුදු දෙකට අඩු සිර දඬුවමක්
II. අවුරුදු හතකට ප්‍රජා අයිතිය අහෝසි වීම.
III. පළාත් සභා මන්ත්‍රීකම අහෝසි වීම.

පළාත් පාලන මැතිවරණයකදී ද මහේස්ත්‍රාත් අධිකරණ විසින් තීන්දු කරනු ඇත.

I. ලඝු නඩු විභාගයකින් රු. 500 ක දඩයක් හෝ මාස 6 කට අඩුසිර දඬුවමක් හෝ දෙකම

## ප්‍රජා අයිතිය නැති වූ අයට අවුරුදු හත ඉක්ම යන තෙක් ඡන්දය පාවිච්චි කළ නොහැකිය.

- අපේක්ෂකයෙකු වෙනුවෙන් ඡන්ද ඉල්ලීම.
- අපේක්ෂකයෙකුගේ නියෝජිතයෙකු වීම.
- කතා පැවැත්වීම හෝ මැතිවරණයකදී කවර ආකාරයකින් හෝ සහභාගි වීම නොකළ යුතුය.

එසේ කළහොත් මහේස්ත්‍රාත් උසාවියකින් රු. 1000 ක දඩයක් හෝ මාස හයක සිර දඬුවමක් හෝ ඒ දෙකින්ම දඬුවම් ලැබිය හැකිය.

(පා මැති 67) (ජනාධි 67) (පළාත් 67)
(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 81 ට අනුව සෑම මැතිවරණයකටම අදාළ වේ)

## ඡන්ද දිනයේ තහනම් ක්‍රියා

ඡන්ද පොළක ඡන්ද කටයුතු පැවැත්වෙන කාලය තුළදී එම ස්ථානයෙන් කිලෝ මීටර් බාගයක් ඇතුළත පහත සඳහන් ක්‍රියා තහනම් කොට ඇත.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(පා මැති 71) (පළාත් 71) (ජනාධි71)
(පපා (81 අ (5) 6 (7) (ජ විචා 49 (5) (6))

## අපේක්ෂකයන් නොවන අයගේ ඡන්ද කටයුතු

මුද්‍රණකරුගේ සහ ප්‍රකාශකගේ නම හා ලිපිනයන් සඳහන් නොවන ප්‍රචාරක දැන්වීම් අත් පත්‍රිකා, පෝස්ටර් මුද්‍රණය කිරීම, පළ කිරීම, බෙදා හැරීම, අලවා තැබීමට සැලසීම අපේක්ෂකයෙකු නොවන කෙනෙකු කරන වරදකි. මහේස්ත්‍රාත් උසාවියෙන් රු. 500 ක දඩයක් නියම විය හැකිය. (එසේ සඳහන් නොකිරීම ස්වභාවයෙන් සිදුවූ අතපසුවීමක් නම් ඒ බව ඔප්පු කළ යුතුය.)

(සැ.යු. අපේක්ෂයෙකු හෝ ඔහුගේ නියෝජිතයෙකු එසේ කිරීම - නීති විරෝධි ක්‍රියා යටතේ වරදක් වේ. ඉහත 86 වගන්තිය අදාළ වේ)

(පා මැති 72) (පළාත් 72) (ජනාධි 72)
(පපා (81 ආ (1) (ජ විචා 48)

## මැතිවරණ කාර්යාල ගණන

මැතිවරණ කාර්යාල සාමාන්‍යයෙන් ඡන්ද කාර්යාල යනුවෙන්ද භාවිතා වේ. එවැනි කාර්යාල වර්ග දෙකකි. එකක් එක් මධ්‍යම කාර්යාලයකි. අනික් ඒවා ශාඛා කාර්යාල වේ.

මධ්‍ය කාර්යාලය එක් මැතිවරණ කොට්ඨාශයකට එකකි. (Election District). එක් එක් ඡන්ද කොට්ඨාශයේ එක් ඡන්ද කාර්යාලය බැගිනි. (Polling District)

පළාත් සභා නම් එක් පරිපාලන දිස්ත්‍රික්කයක එක් මධ්‍යම (ප්‍රධාන) කාර්යාලයකි.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## කාර්යාල පැවැත්විය යුතු කාල සීමාව

1. මධ්‍ය කාර්යාලය නාම යෝජනා දිනයෙන් පටන් ගෙන ඡන්දය විමසන දිනයට පෙර දිනයෙන් අවසන් විය යුතුය.

2. ශාඛා කාර්යාල එතැන් සිට එනම් ඡන්දය විමසන දිනයට පෙර දිනයෙන් පටන්ගෙන පසු දිනය දක්වා විය යුතුය.

♓ මේ අනුව ඒ කාර්යාල වර්ග දෙකම එකවිට පැවැත්විය නොහැකිය. දිස්ත්‍රික් කාර්යාලය අවසන් කොට ශාඛා කාර්යාල පටන්ගත යුතුය.

♓ මෙම කාර්යාල පැවැත්වීම ගැන දිස්ත්‍රික්කයේ තේරීම් භාර නිලධාරියාටත් ප්‍රදේශයේ පොලිස් ස්ථානාධිපතිටත් දැනුම් දී තිබිය යුතුය. ඒ නිසා නිවේදන (Notified) කාර්යාල වශයෙන් හැඳින්වේ.

♓ ඉහත සීමාව යටතේ අපේක්ෂකයෙකුගේ නිවස මැතිවරණ කාර්යාලයක් ලෙස පැවැත්විය හැකිය.

මෙම නීතිය කඩ කිරීමද කඩ කිරීමට තැත් කිරීමද වරදකි. නඩු පැවරීමට නීතිපතිගේ අනුමැතිය අවශ්‍යය. වරදට දඬුවම රු. 100 ක දඩයක් හෝ මාසයක සිර දඬුවම රු. 100 ක දඩයක් හෝ මාසයක සිර දඬුවමක් හෝ ඒ දෙකම විය හැකිය.

(පා මැති 73) (පළාත් 73) (ජනාධි 73)
(පපා - ) (ජ විචා - )

එහෙත් අපේක්ෂකයෙකු ගමන් ගන්නා වාහනයක ඒවා ප්‍රදර්ශනය කළ හැකිය.

අපේක්ෂකයෙකුට ආධාර පිණිස පවත්වන රැස්වීමකදී එම ස්ථානයේ එම දිනයේ පමණක් ඒවා ප්‍රදර්ශනය කළ හැකිය.

ඉහත සඳහන් වැරදි කිරීමට තැත් කිරීමටද වැරදි වරෙන්තුවක් නැතිව අත් අඩංගුවට ගත හැකිය. එම වැරදි ක්‍රියා හෝ තැත් කිරීම්



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ඡන්දය දෙන ලෙස ඡන්ද හිමියන්ගෙන් ඉල්ලීම.
- නිශ්චිත ඡන්ද දායකයෙකුගේ ඡන්දය ඉල්ලීම.
- නිශ්චිත පක්ෂයකට හෝ කණ්ඩායමකට ඡන්දය නොදෙන ලෙස ඡන්ද හිමියෙකු පෙළඹවීම.
- සමස්ත මැතිවරණයේදීම ඡන්දය නොදෙන ලෙසට ඡන්ද හිමියෙකු පෙළඹවීම.
- ඡන්ද විමසීම් සම්බන්ධ (නිල ලේඛනයක් නොවන) අත් පත්‍රිකාවක් ප්‍රදර්ශන පත්‍රයක් දැන්වීමක් චිත්‍රයක් ඡායාරූපයක් හෝ පිළිගත් පක්ෂයකට හෝ කණ්ඩායමකට අයත් ලකුණක් බෙදාහැරීම හෝ ප්‍රදර්ශනය කිරීම.

දඬුවම මහේස්ත්‍රාත් උසාවියේ ලඝු නඩු විභාගයකින් පසු වරද ඔප්පු වුවහොත් රු. 100 ක දඩයක් හෝ මාසයක සිර දඬුවමක් හෝ ඒ දෙකම නියම විය හැකිය.

## ඡන්ද පොළ අසල වැරදි හැසිරීම

ඡන්ද පොළ සීමාව ඇතුළත දී ඡන්ද පොළට පැමිණෙන අයට රාජකාරි කරන නිළධාරින්ට හෝ වෙනත් අයගේ වැඩට බාධා වන පරිදි,

- ශබ්ද විකාශන උපක්‍රම පාවිච්චි කිරීම.
- කෑ ගැසීම.
- අසංවර ලෙස හැසිරීම, තහනම්ය.

එයට ද ඉහත සඳහන් දඬුවම් නියම විය හැකිය.

එවැනි ක්‍රියා මැඩ පැවැත්වීමට පොලීසියට බලය පාවිච්චි කිරීමටත් යම් දේවල් අත්අඩංගුවට ගැනීමටත් පනත් වලින්ම ඉඩ සැලසී ඇත.

(පා මැති 68) (පළාත් 68) (ජනාධි 68)
(පපා 81 අ) (ජ විචා 44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## පෙරහැර පෙළපාලි ආදිය පැවැත්වීම

මැතිවරණයට නාම යෝජනා බාරදුන් දින දක්වා පෙරහැරවල් පෙළපාලි මෙහෙයවීම, පැවැත්වීම හෝ සහභාගිවීම තහනම් වේ. මැතිවරණයට අනුබල නොදෙන අයුරින් ආගමික හා සමාජීය කාර්ය සඳහා පෙරහැරවල් පැවැත්වීමට පුළුවන. (උදා : මැයි දින පෙළපාලියක් පොසොන් පෙරහැරක් ආදිය)

නීතිය කඩ කළහොත් දඬුවම මාසයක සිර දඬුවමක් රු. 100 ක දඩයක් හෝ ඒ දෙකම

(පා මැති 69) (පළාත් 69)
(ජනාධි 69) (පපා 81 අ (2)
(ජ විචා 45)

## මහජන රැස්වීම් පැවැත්වීම

මැතිවරණයට දෙදිනකට පෙර (පැය 48 කට පෙර) සිට ප්‍රතිඵල නිකුත් වී සතියක් ගතවනතෙක් මහජන රැස්වීම් පැවැත්වීම තහනම් වේ.

මාසයක සිර දඬුවමක් හෝ රු. 100 ක දඩයක් හෝ ඒ දෙකම - මහේස්ත්‍රාත් උසාවියකින්)

(පා මැති 70) (පළාත් 70) (ජනාධි 70)
(පපා 81 අ 2 ආ) (ජ විචා 46)

## ඉහත වැරදි කිරීමට තැත් කිරීම

ඉහත වගන්ති පහේ - එනම් 66 - 67 - 68 - 69 - 70 වගන්තිවල සඳහන් වැරදි කිරීම ගැනද එම දඬුවම්ම වේ.

එම වගන්ති පහේ වැරදි ගැන සැක කොට වරෙන්තුවක් නැතිව අත් අඩංගුවට ගත හැකිය.

එම වැරදි සඳහා නඩු පැවරෙන්නේ නීතිපතිවරයාගේ අනුමැතිය ලැබුනොත් (පසුගිය කාලයන්හි එසේ පැමිණිලි කරනු ලැබූ සමහර වැරදිවලට නඩු පැවරීමට නීතිපතිවරයා අනුමැතිය දී නැත)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉහත වැරදි ක්‍රියා සඳහා තැත් කිරීමද වරදකි.

- මහේස්ත්‍රාත් උසාවියේ ලඝු නඩු විභාගයකින් පසු රු. 500ක දඩයක් හෝ මාස 6ක සිර දඬුවමක් හෝ ඒ දෙකම නියම විය හැකිය.

වරදකරු වීම නිසා අවුරුදු 7කට ඡන්ද බලය අහිමි වේ.

(පා මැති 76) (පළාත් 77) (ජනාධි 75)
(පපා 76 77) (ජ විචා 51)

## දූෂණ ක්‍රියා

පහත සඳහන් වැරදි මැතිවරණ දූෂණ ක්‍රියා වශයෙන් හඳුන්වා ඇත.

## හොර ඡන්ද දැමීම

ජීවත්ව සිටින හෝ මිය ගිය කෙනෙකු වෙනුවෙන් පෞද්ගලිකව හෝ තැපෑලෙන් ඡන්දය දීමත් තමාගේ නමින්ම එක් වරකට වඩා ඡන්දය දීමත් හොර ඡන්ද දැමීම වේ.

- මේ සඳහා ඡන්දය දමා තිබීම අවශ්‍ය නැත. ඡන්ද පොළකින් ඡන්දය දැමීමට ඡන්ද පත්‍රිකාවක් ඉල්ලුම් කිරීම මගින්.
- තැපැල් ඡන්ද ඉල්ලුම් කිරීම මගින්.
- තැපැල් ඡන්ද පත්‍රිකාවක් ලකුණු කිරීම මගින්, එම වරද සම්පූර්ණ වේ.

මේ සඳහා වරෙන්තුවක් නැතිව අත්අඩංගුවට ගත හැකිය.

(පා මැති 77) (පළාත් 78) (ජනාධි 76)
(පපා 80) (ජ විචා 52)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## සංග්‍රහ කිරීම

- මැතිවරණයට පෙර හෝ පසුව හෝ පසු හෝ ඒ අතරතුර හෝ ඡන්දය දීම සඳහා නැත්නම් නොදීම සඳහා සංග්‍රහ කිරීම වරදකි.
- තමන් විසින්ම හෝ වෙන කෙනෙකු මාර්ගයෙන් එය කිරීම වැරදිය. තවත් කෙනෙකුගේ ඡන්දය ලබාගැනීම හෝ ඡන්දය නොදැමීම පිණිස කෙනෙකුට සංග්‍රහ කිරීමද වැරදිය.
- සංග්‍රහ කිරීමට පහත සඳහන් දේ ඇතුළත්ය.
- කෙළින්ම හෝ වෙනත් මගකින් කෑමක් බීමක් අනපානයක් හෝ ආහාර ද්‍රව්‍යයක් දීම හෝ සැපයීම.
- එවැනි දේ ලබාගැනීම පිණිස බලපත්‍රයක් හෝ වෙනත් උපක්‍රමයක යෙදීම.
- එවැනි දේ සැපයීමේ යම් වියදමක් ගෙවීමට පොරොන්දුවීම.
- එවැනි සංග්‍රහයක් දීම හෝ සැපයීම මෙන්ම එය ලබාගැනීම හෝ ලැබීමේ උපක්‍රමයක් යෙදීම ද සංග්‍රහ කිරීමේ වරදට අදාළ වේ.

(පා මැති 78) (පළාත් 79) (ජනාධි 77)
(පපා 79) (ජ විචා 53)

## අයුතු බලපෑම්

අයුතු බලපෑම් යනු ඡන්ද බලය නිදහසේ පාවිච්චි කිරීමට හෝ නොකිරීමට බාධා කිරීම හෝ පෙළඹවීම වේ.

යම් මැතිවරණයකදී ඡන්දය දීමට හෝ නොදීමට පෙළඹවීම හෝ බල කිරීම සඳහා යන ඡන්දය දී තිබීම හෝ දීමෙන් වැලකී සිටීම නිසා කෙළින්ම හෝ වෙනත් විදියකින් අයුතු බලපෑම් සිදුකළ හැකිය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වැළැක්වීමට පොලිස් නිලධාරින්ට බලය පාවිච්චි කල හැකිය. මහේස්ත්‍රාත් උසාවියක ලඝු නඩු විභාගයකින් පසු මාසයක සිර දඬුවමක් හෝ රු.100 ක දඩයක් හෝ ඒ දෙකම නියම විය හැකිය.

පොලිස් නිලධාරින්ට එම ද්‍රව්‍ය අත් අඩංගුවට ගැනීමට හෝ ඉවත් කිරීමට බලය ඇත.

(පා මැති 74) (පළාත් 74) (ජනාධි 74)
(පපා 81 ආ) (ජ විචා 50)

## ඡන්දය ඉල්ලීම්

නාම යෝජනා අවසන් දින සිට ඡන්ද විමසීම් දිනට පසු දින දක්වා ඡන්ද අපේක්ෂකයෙකු/ අපේක්ෂිකාවක් හෝ පවුලේ කෙනෙකු (පවුලේ අය යනු සැමියා - බිරිඳ - දුව- පුතා - පුතාගේ /බිරිඳ - දුවගේ සැමියා) පහත සඳහන් දේ කිරීම වරදකි.

- ඡන්දය ඉල්ලීමට නිවෙස්වලට යෑම.
- පක්ෂයට හෝ අපේක්ෂකයෙකුට ඡන්දය නොදෙන ලෙසට පෙළඹවීම.
- මැතිවරණයේදී ඡන්දය පාවිච්චි නොකරන ලෙසට පෙළඹවීම.
- අත් පත්‍රිකා ප්‍රදර්ශන පත්‍ර දැන්වීම් චිත්‍ර ඡායාරූප ලකුණු ප්‍රදර්ශනය කිරීම.

මෙම වරද කළොත් අපේක්ෂකයා/ අපේක්ෂිකාව මහේස්ත්‍රාත් උසාවියේ රු. 100 ක දඩයක් හෝ මාසයක් සිර දඬුවමක් හෝ ඒ දෙකම ලබනු ඇත.

(පා මැති 75) (පළාත් 75)
(ජනාධි 75) (පපා -) (ජ විචා -)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## රහස්‍යතාවය රැකීම

ඡන්ද පොළට හෝ ගණන් කරන ස්ථානයට පැමිණ සිටීමට බලය ලබන නිලධරයන්, ලිපිකරුවන්, නියෝජිතයන්, අපේක්ෂකයන්, නියමිත රහස්‍යතා ප්‍රකාශයට අත්සන් කළ යුතුයි.

එම ප්‍රකාශය පහත සඳහන් වැරදි නොකරන බවට දෙන පොරොන්දුවකි.

- ඡන්ද පත්‍රිකාවක් සඳහා ඉල්ලුම් කර ඇති හෝ නැති හෝ යම් ඡන්ද හිමියකුගේ නම, අංකය හෝ නිල ලකුණ ගැන යම් තොරතුරක් ඡන්ද විමසීම අවසන් කිරීමට පෙර එළි කිරීම.
- ඉහත සඳහන් අය විසින් යම් ඡන්ද දායකයෙකු ඡන්දය දෙන්නට යන්නේ හෝ දුන්නේ මොන මොන පක්ෂයටද හෝ කණ්ඩායමටද යන වග ඡන්ද පොළේදී ලබාගැනීමට තැත් කිරීම.
- ඡන්ද දායකයෙකුට දෙන ලද ඡන්ද පත්‍රිකාවේ පිට පැත්තේ අංකය ගැන තොරතුරක් යම් තැනැත්තෙකුට දැනුම් දීම.
- ඉහත සඳහන් අය විසින් ඡන්ද ගණන් කිරීමේදී පත්‍රිකාවක පිට පැත්තේ සඳහන් අංකය දැන ගැනීමට තැත් කිරීම.
- ඡන්ද පත්‍රිකාවක් මඟින් ඡන්දය දී ඇති පක්ෂය හෝ කණ්ඩායම ගැන තොරතුරු කිසිවකුට දැනුම් දීම.
- මේ පනතින් බලය ලත් ස්ථානාධිපති විසින් හෝ ස්ථානාධිපතිගෙන් බලය ලත් තැනැත්තෙකු විසින් හැර වෙනත් අයකු විසින් ඡන්ද දායකයෙකු ඡන්ද පත්‍රිකාව පෙට්ටියට දැමීමට පෙර එම ඡන්ද දායකයා සමඟ කතා බහ කිරීම.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

තමන් විසින් හෝ වෙනත් අයකු මගින් යම් තැනැත්තෙකුට හෝ ඔහු වෙනුවෙන් වෙනත් කෙනෙකුට අයුතු බලපෑම් කළ හැකිය.

බලපෑමක්, සාහසික කමක් අවහිරයක් තර්ජනයක් කෙළින්ම හෝ වෙනත් කෙනෙකු මඟින් කළ හැකිය.

මේ බලපෑම්වල ලෞකික හෝ මානසික පීඩාවක්, පාඩුවක්, හානියක්, සාපයක් කරන බවට තර්ජනය කිරීම, පැහැර ගෙන යන බවට ඇඟවීම මඟින් නිදහස් ඡන්දය දීමට බාධා කිරීමට සිදුවේ.

(2) නාම යෝජනා දිනයේ සිට විමසන දිනට පසුදා දක්වා කාලයේදී යම් පක්ෂයකට හෝ කණ්ඩායමකට ඡන්දය දීමට හෝ නොදීමට පෙළඹවීම සඳහා ආගමික රැස්වීමකදී කියා සිටීම එවැනි ආගමික රැස්වීමකදී මැතිවරණය සඳහා ආගමික රැස්වීමකදී කියා සිටීම, එවැනි ආගමික රැස්වීමකදී මැතිවරණය සඳහා පත්‍රිකා දැන්වීම් චිත්‍ර ඡායාරූප ලකුණු කොඩි බෙදාහැරීම හෝ ප්‍රදර්ශනය කිරීම මැතිවරණයේ යෙදෙන පක්ෂයකට හෝ කණ්ඩායමකට හෝ ආධාර පිණිස පූජනීය ස්ථානයක රැස්වීමක් පැවැත්වීම - අයුතු බලපෑමේ වරද වේ.

(3) මැතිවරණ හේතු මත පූජනීය කටයුතු නොකරන බවට තර්ජනය කිරීම හෝ එම ආගමික සංවිධානයෙන් බැහැර කරන බවට තර්ජනය කිරීම අයුතු බලපෑම වේ.

(4) පක්ෂයකට හෝ කණ්ඩායමකට ඡන්දය දීම හෝ නොදීම පිණිස ඡන්දය දී තිබීම හෝ ඡන්දය දීමෙන් වැළකී සිටීම නිසා සේවා යෝජකයා

- රැකියා අහිමි කිරීම හෝ එසේ කරන බවට තර්ජනය කිරීම.

- රැකියාවේ යෙදී සිටියදී භුක්ති වින්දා වූ හෝ භුක්ති විඳීමට තිබෙන ප්‍රතිලාභ හෝ සේවා ප්‍රතික්ෂේප කිරීම හෝ එසේ කරන බවට තර්ජනය කිරීමද අයුතු බලපෑම්.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(පා මැති 79) (පළාත් 80) (ජනාධි 78)
(පපා 81) (ජ විචා 54)

## අල්ලස් දීම

- ඡන්දය දීම හෝ නොදීම සඳහා ඡන්ද හිමියෙකු පෙළඹවීමට දෙන දීමනාවකි. එය වක්‍ර මාර්ගයකින් දීමක් විය හැකිය. ඡන්ද හිමියා වෙනුවෙන් වෙනත් කෙනෙකුට දෙන දීමනාවක් ද ඇතුළත් වේ.
- එසේ දෙන දේ මුදලක්, ණයක් වෙනත් දෙයක් විය හැකිය දීමට පොරොන්දු වීම ලබාදීමට උත්සාහ කරන බවට පොරොන්දු වීම අල්ලස් දීමකි.
- එසේ දෙන දේ දීමට පොරොන්දු වන දේ නිලයක්, තනතුරක්, රැකියාවක්, විය හැකිය ඡන්දය දුන් නිසා හෝ නොදුන් නිසා එසේ කිරීමද අල්ලසකි.
- එසේ දෙන දේ (කෙළින්ම හෝ වක්‍ර මාර්ගයකින්) තෑග්ගක්, ණයක්, යෝජනාවක්, පොරොන්දුවක්, ලබාදීමක් හෝ ගිවිසුමකින් වුවද වරද සිදුවේ. ඒ අනුව ඡන්දයක් ලබාදීම හෝ ලබාදීම සඳහා පොරොන්දු වීම වැරදිය.
- අල්ලස් වශයෙන් වියදම් කළ යුතුය යන චේතනාවෙන් යම් තැනැත්තෙකුට කලින්ම මුදලක් දීම වැරදිය.

## ලබාගන්නා ඡන්ද හිමියා ද වැරදිකරුවීම

මැතිවරණයට පෙර හෝ එය පැවැත්වෙද්දී හෝ එසේ යම් දෙයක් ලබාගැනීම එකඟවීම ගිවිසුමක් ඇතිකර ගැනීම මඟින් ඡන්ද හිමියාද අල්ලස් ගැනීමේ වරද කරයි.

ඉහත විස්තර වූ ආකාරයේ අල්ලස් තමන් විසින්ම හෝ වෙනත් තැනැත්තෙකු මඟින් කෙළින්ම හෝ වක්‍ර මඟකින් ඉල්ලුම් කරන තැනැත්තාද අල්ලසට වරදකරු වේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉහත සඳහන් පරිදි අල්ලසක් දීමට හෝ ලබාදීම පිණිස උත්සාහ කරන බවට පොරොන්දු වන තැනැත්තා ද අල්ලස් දීමේ වරද කරයි.

(පා මැති 80) (පළාත්81) (ජනාධි 79)
(පපා 79) (ජ විචා 55)

## දූෂණ ක්‍රියා සම්බන්ධ දඬුවම්

හොර ඡන්ද දැමීම, ඡන්ද දැමීමට අනුබල දීම, සංග්‍රහ කිරීම, අයුතු බලපෑම, අල්ලස් දීම, චරිත ඝාතනය කිරීම, අපේක්ෂකයෙකු ඉල්ලා අස්වූ බවට අසත්‍ය ප්‍රකාශ කිරීම, මැතිවරණ දූෂණ ක්‍රියා සම්බන්ධයෙන් දඬුවම් ලැබීමට හේතුවේ.

හොර ඡන්ද දැමීම ගැන දඩය රු. 500 කි. සිර දඬුවම බරපතල වැඩ සහිත මාස 12 කි. අනික් වැරදිවලට රු. 500 ක් හෝ මාස හයක් හෝ ඒ දෙකමය.

- මේ සම්බන්ධ නඩු විභාගය සිදුවන්නේ මහාධිකරණයේය.
- නඩු පැවරීමට නීතිපතිගේ අනුමැතිය අවශ්‍යය.
- වරදකරු වුවහොත් අනික් දඬුවම්වලට අමතරව අවුරුදු හතකට ප්‍රජා අයිතිවාසිකම් ද අහිමි වේ. මන්ත්‍රීකමක් තිබුණොත් එය අහෝසි වේ.

(පා මැති 82) (පළාත් 81) (ජනාධි 79)
(පපා 79) (ජ විචා 56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. නීති විරෝධී ක්‍රියා

මැතිවරණයකදී කරනු ලබන ඇතැම් ගෙවීම් හෝ වියදම් නීති විරෝධී ක්‍රියාවක් ලෙස මේ කොටසේදී සැලකේ.

- ඡන්ද ස්ථානයේ සිට හෝ ඡන්ද ස්ථානයට ඡන්ද හිමියන් ප්‍රවාහනයට කවර ආකාරයක හෝ ගමන් ගාස්තු ගෙවීමට හෝ ගෙවීමට ගිවිස ගැනීම නීති විරෝධී ක්‍රියාවකි.

- පත්‍රිකා දැන්වීම් ආදිය ප්‍රදර්ශනය සඳහා හෝ ප්‍රදර්ශනය සඳහා ස්ථානයක් පාවිච්චි කිරීම නිසා ඡන්ද හිමියෙකුට ගෙවීමක් කිරීම හෝ ගෙවීමට ගිවිස ගැනීම නීති විරෝධීය.

- මැතිවරණයකට පෙර පසු හෝ ඒ අතරතුරදී ගෙවීමක් කිරීම හෝ ගෙවීමට ගිවිසුමක් ඇතිකර ගැනීම මෙන්ම ගෙවීමක් ලැබීමත්, ගිවිසුමට පාර්ශවකරුවෙකු වීමත් වැරදිය.

- ඡන්දය විමසීමට පැයකට පෙර සහ එය අවසන් වී පැයකට පසු යන කාලය අතරතුර ඡන්ද ස්ථානයට හෝ ඒ ස්ථානයේ සිට ඡන්ද දායකයන් ප්‍රවාහනය කිරීම සඳහා ආධාර අනුබල දීම නොකළ යුතුය නීත්‍යානුකූල කටයුත්තක් හෝ නිල කටයුත්තක් කළ හැකිය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ඉහත සඳහන් ක්‍රියා නීති විරෝධී නොවන අවස්ථා මෙසේය.**

යම් ඡන්ද හිමියෙකු සිය ව්‍යාපාර කටයුත්තක් වශයෙන් පත්‍රිකා හා ප්‍රචාරක දැන්වීම් ප්‍රදර්ශනය කිරීම නීති විරෝධී නොවේ.

- ගංගාවකින් හෝ මුහුදෙන් නොගොස් ඡන්දය දිය නොහැකි අවස්ථාවක ඡන්ද හිමියන්ට මුහුදින් හෝ ගඟින් එතෙරවීමට ඉඩ සැලසිය හැකිය.

- පොදු ප්‍රවාහන සේවය මඟින් තමන්ගේ අතින් වියදම් කර ඡන්ද පොළට යාම ඒම නීති විරෝධී ක්‍රියාවක් නොවේ.

- ඡන්ද දිනට දින 07 කට පෙර තේරීම් භාර නිලධාරියාගෙන් ලිඛිත අවසරයක් ඇතිව ශාරීරික දුබලතාවයක් ඇති තැනැත්තෙකුටඡන්ද පොළට යාමට හෝ ඒමට ගමන් පහසුවක් යොදාගත හැකිය. (අපේක්ෂකයෙකු විසින් ඡන්ද හිමියෙකු වෙනුවෙන් එම ලිඛිත අවසරය නොඉල්ලිය හැකිය)

- නීති විරෝධී ලෙස ප්‍රවාහනය කරන විට තමන්ගේම මෙහෙයවීමෙන් හෝ පැමිණිල්ලක් මත පොලිස් නිලධාරියෙකුට එම වාහනය අත් අඩංගුවට ගෙන ඡන්ද විමසීම අවසන් වනතෙක් රාජසන්තක කිරීමට මහාධිකරණයට බලය තිබේ.

(පා මැති 83) (පළාත් 84) (ජනාධි 82)
(පපා 81 ඈ) (ජ විචා 57)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# අසත්‍ය ප්‍රකාශ පළ කිරීම

යම් පුවත්පතක්, සඟරාවක්, පත්‍රිකාවක් හෝ ප්‍රකාශනයක් හෝ ප්‍රකාශනයක් මඟින් අසත්‍ය වූ යමක් පළ කිරීම මෙයින් අදහස් වේ.

එම අසත්‍ය ප්‍රකාශය අදාළ මැතිවරණයේ දී තරඟ කරන පිළිගත් දේශපාලන පක්ෂයක, ස්වාධීන කණ්ඩායමක් හෝ අපේක්ෂකයෙකුගේ මැතිවරණ සම්බන්ධ කථා හෝ කටයුතු සම්බන්ධයෙන් විය යුතුය.

එම අසත්‍ය ප්‍රකාශය මැතිවරණයේ ප්‍රතිඵල කෙරෙහි බලපෑමක් ඇති කළ හැකි එකක් විය යුතුය.

එවැනි ප්‍රකාශයක් පළ කරන ප්‍රකාශනයේ අයිතිකරු කළමනාකරු සංස්කාරක ප්‍රකාශක හෝ ලේඛකයා වගකීමට බැඳෙනු ඇත.

එක් එක් තැනැත්තා විසින් ඒ සඳහා වග කිවයුතු නොවන බවට අවශ්‍ය කරුණු ඔප්පු කිරීමෙන් නිදහස් විය හැකිය.

**(සැකසීම - නීතිඥ එස්.පී. පුංචිහේවා)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்கள், தவறுகள் மற்றும் தண்டனைகள்

சிங்கள மூலம்:
சட்டத்தரணி எஸ். ஜீ. புஞ்சிஹேவா

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம்
Campaign for Free & Fair Elections
CaFFE

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# අනුශෝක ප්‍රකාශ පළ කිරීම

මේ ආයතනයේ, සංගමයේ, දෙපාර්තමේන්තුවේ හෝ ප්‍රධානියාගේ හෝ ප්‍රකාශනයේ නමින් අනුශෝක වූ ලෙසින් පළ කිරීම මෙයින් අදහස් වේ.

මෙම අනුශෝක ප්‍රකාශය අදාළ මරණ දැන්වීමෙන් දී පළ කරන පිළිවෙළ සම්ප්‍රදාය අනුව, ඒ ඒ ආයතනයේ හෝ ආදාහනය/භූමදානය [illegible] මරණ දැන්වීම් පළ කිරීමෙන් පසු [illegible] වීම යුතුය.

මෙම අනුශෝක ප්‍රකාශය මරණ දැන්වීමෙහි ප්‍රතිචාර [illegible] ඇති කළ හැකි වීමක් විය යුතුය.

ප්‍රතිචාර ප්‍රකාශයන් පළ කරන ප්‍රකාශකයන් අභිමතය [illegible] සංස්කරණ ප්‍රකාශය හෝ සේවකයා විසින් [illegible] ඇත.

[illegible]

(සංස්කරණ - [illegible])



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்கள், தவறுகள் மற்றும் தண்டனைகள்

சிங்கள மூலம்:
சட்டத்தரணி எஸ். ஜீ. புஞ்சிஹேவா


නිදහස් හා සාධාරණ මැතිවරණයක් සඳහා වූ ජනතා ව්‍යාපාරය
நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்
Campaign for Free & Fair Elections
CaFFE 100/10, Walikada Waththa Road, Rajagiriya. Tel. 060 2188106 E-mail caffe2008@gmail.com

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

முன்னுரை .................................................... 3

I வாக்களிப்புத் தவறுகள் .............................. 5

பிரஜா உரிமை இழந்தவர்
வேட்பாளர்கள் அல்லாத ஆட்களின் தேர்தல் நடவடிக்கைகள்
தேர்தல் பிரசார அலுவலகங்களின் எண்ணிக்கை
தேர்தல் பிரசார அலுவலகங்கள் செயற்படும் கால எல்லை
வாக்கெடுப்பு நிலையம் அருகே தவறான நடத்தைகள்
ஊர்வலங்களை நடாத்துதல்
பொதுக்கூட்டங்களை நடாத்துதல்
தவறுகளை செய்ய முயற்சித்தல்
இரகசியம் பேணுதல்

II ஊழல் நடவடிக்கைகள் .............................. 13

கள்ள வாக்குப் போடுதல்
உபசாரஞ் செய்தல்
தகாத செல்வாக்கு
இலஞ்சம் வழங்குதல்
ஊழல் மோசடி பற்றிய தண்டனைகள்

III சட்ட விரோதச் செயல்கள் .............................. 20

பொய்யான கூற்றுக்களைப் பிரசுரித்தல்
கொடுப்பனவிற்குத் தேர்தல் வேலை
சட்ட விரோதச் செயல்களுக்குத் தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சாதாரண மனிதனின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடைமுறையிலிருக்க வேண்டும். இந்த நடைமுறை மூலம் மட்டுமே மக்களின் விருப்பத்திற்கு உண்மையான பெறுமதி கிடைக்கும். மனித உரிமைகள் பிரகடனத்தின் 21வது உறுப்புரையில் இக்கருத்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

1. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபற்றுவதற்கு உரிமையுண்டு.

2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

3. பொது மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பமானது, காலாகாலம் நடைபெறும் நேர்மையான தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத் தேர்தல்கள் சமமானதும் - சர்வஜன வாக்கெடுப்பு உரிமை மூலமே அமுல்படுத்தப்பட வேண்டும். இரகசிய வாக்கெடுப்பு மூலம் அல்லது அதற்குச் சமமான சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் தேர்தல்கள் நடைபெறுதல் வேண்டும்.

பொது மக்களின் இவ்வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்கு தேர்தல் ஆணையாளர் பதவி, தேர்தல்கள் செயலகம், பல தேர்தல்கள் சட்டங்கள் என்பன உண்டு. இவை அனைத்தையும் மீறியே தேர்தல் தவறுகள் இடம்பெறுகின்றன.

இச்சிறு நூல் மூலமாக தேர்தல் தவறுகளையும் அவற்றிற்கான தண்டனைகளையும் பற்றி அறிவூட்ட முயன்றுள்ளோம். தேர்தல்களில் ஈடுபாடுள்ள அனைத்துச் செயற்பாட்டாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இது பயன்தரும்.

எஸ். ஜீ. புஞ்சிஹேவா
சட்டத்தரணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்களும் தவறுகளும் தண்டனைகளும்

எமக்கு வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் பல வகையான தேர்தல்களும் பொது ஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றும் உண்டு. இச் சகல தேர்தல்களின்போதும் சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கக் கூடிய தவறுகள் அவ்வச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. 1981இன் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் அத்தகைய 3 வகைத் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவை வாக்களிப்புத் தவறுகள், ஊழல் நடவடிக்கைகள், சட்டவிரோத நடவடிக்கைகள் என்பனவாகும். அபிப்பிராய வாக்கெடுப்பிலும் ஏனைய தேர்தல்களிலும் இவை செல்லுபடியாகும். பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் அவற்றின் உறுப்புரைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

வாக்களிப்புத் தவறுகள் - 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76
ஊழல் நடவடிக்கைகள் - 77, 78, 79, 80, 81, 82
சட்டவிரோத நடவடிக்கைகள் - 83, 84, 85, 86, 87, 88, 89, 90

இத்தவறுகளுக்குரிய தண்டனைகள் மற்றும் சட்டரீதியான பெறுபேறுகளின் மாற்றங்களுக்கு ஏற்ப இவை வகைப் படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறிய தவறுகள் சகல வாக்களிப்புச் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையதாகும். இது தொடர்பான சட்டங்கள் பின்வருமாறு. சட்டத்தின் சுருக்கப்பெயர் அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்படுகின்றது.

1981இன் 1ம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல் சட்டம் (பா.தே.ச)
1981இன் 15ம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டம் (ஜ.தே.ச)
1989இன் 2ம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டம் (மா.ச.தே.ச)
அத்தியாம் 262 உள்ளூராட்சி தேர்தல் கட்டளைச் சட்டம் (உ.தே.ச)
1981இன் 7ம் இலக்க மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புச் சட்டம் (ம.அ.வா.ச)

வசதிக்காக இத் தவறுகளின் சாராம்சத்தை மாத்திரம் இங்கு குறிப்பிடுகின்றோம். அத்தோடு ஒவ்வொரு சட்டத்தின் உறுப்புரை இலக்கங்கள் மாத்திரம் குறிப்பிடப்படுகின்றன. எனவே, எந்தவொரு வாக்கெடுப்பிற்கும் இதனை ஏற்புடையதாக்க முடியும். அத்தகைய உறுப்புரை இல்லாவிட்டால் இல்லை என குறிப்பிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I வாக்களிப்புத் தவறுகள்

ஏதேனும் நியமனப்பத்திரத்தை போலியாகப் புனைதல், உருவழித்தல், மோசடியாக அழித்தல், தெரிந்து கொண்டே ஏதேனும் நியமனப் பத்திரத்தைத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல்.
(பா.தே.ச.66a) (மா.ச.தே.ச.66a) (ஜ.தே.ச.66a)
[உ.தே.ச.78(1)a] **(ம.அ.வா.ச.இல்லை)**

ஏதேனும் வாக்குச்சீட்டிலுள்ள அலுவலக முறையான குறியீட்டை போலியாகப் புனைதல், கள்ள வாக்குச் சீட்டுக்களைத் தயாரித்தல், மோசடியாக உருவழித்தல், மோசடியாக அழித்துவிடுதல்.
(பா.தே.ச.66b) (மா.ச.தே.ச.66b) (ஜ.தே.ச.66b)
[உ.தே.ச.78(1)b] **(ம.அ.வா.ச.43a)**

முறையான அதிகாரமின்றி வாக்குச் சீட்டை வழங்குதல், வாக்குச் சீட்டை விற்பனை செய்தல், வாக்குச் சீட்டை கொள்வனவு செய்தல்.
(பா.தே.ச.66 c-d) (மா.ச.தே.ச.78(1) c-d)
(ஜ.தே.ச.66 c-d) (ம.அ.வா.ச.43 c-d)

வாக்கெடுப்பு நிலையமொன்றினுள் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டை வேண்டுமென்றே வெளிக்காட்டுதல்.
(பா.தே.ச.66 cc 1988/15 திருத்தச் சட்டம் 19)
(மா.ச.தே.ச.66 ee)

சட்டரீதியான உரித்துடைமை இல்லாதபோது உத்தியோக சின்னம் பொறிக்கப்பட்ட ஏதேனும் வாக்குச் சீட்டை தமது உடைமையில் வைத்திருத்தல்.

வாக்குச் சீட்டுத் தவிர்ந்த வேறு எதனையும் வாக்காளர் வாக்குச் சீட்டுப் பெட்டியில் போடுதல்.
(பா.தே.ச.66f) (மா.ச.தே.ச.66f)
(ஜ.தே.ச.66f) (ம.அ.வா.ச.48f)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான அதிகாரமின்றி வாக்குச் சீட்டுப்பெட்டியை வாக்குச்சீட்டுப் பக்கற்றை அழித்தல், பெறுதல், திறத்தல், அல்லது வேறு ஏதேனும் செய்தல்.

(பா.தே.ச.66h) (மா.ச.தே.ச.66h)

(ஜ.தே.ச.66h) [உ.தே.ச.78(1)h]

தேர்தல் ஒன்றின்போது முறையான அதிகாரமின்றி வாக்குச் சீட்டுக்களை அச்சிடுதல்.

(பா.தே.ச.66i) (மா.ச.தே.ச.66i) [உ.தே.ச.78(1)i]

(ஜ.தே.ச.66i) (ம.அ.வா.ச.43h)

வாக்குச் சீட்டுப் பெட்டியிலிருந்து வாக்குச் சீட்டுக்களை வெளியே எடுப்பதற்கு ஏதேனும் உபகரணத்தை அல்லது கருவியை தேர்தல் ஒன்றின் நோக்கத்திற்காக உருவாக்குதல், வெளிநாட்டிலிருந்து தருவித்தல், தனது உடைமையில் வைத்திருத்தல், வழங்குதல், உபயோகித்தல் அல்லது மேற்படி நடவடிக்கைகளுக்கு இடமளித்தல்.

(பா.தே.ச.66j) (மா.ச.தே.ச.66j)

(ஜ.தே.ச.66j) [உ.தே.ச.78(1)j] (ம.அ.வா.ச.43j)

அஞ்சல் வாக்கெடுப்பின் போது ஆள் அடையாளம் பற்றி பொய்ப் பிரகடனம் செய்தல்.

(பா.தே.ச.66l) (மா.ச.தே.ச.66l)

(ஜ.தே.ச.66l) (உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.ச.43l)

அஞ்சல் வாக்காளர் ஒருவராக கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம் அல்லது அடையாளம் பற்றிய வெளிப்படுத்துகை எதனையும் அல்லது மேலுறை அல்லது அஞ்சல் வாக்குச் சீட்டு உறை எதனையும் முறையான அதிகாரமின்றி திறத்தல், அழித்தல் அல்லது அதில் ஏதாவது சேர்த்தல்.

(பா.தே.ச.66m) (மா.ச.தே.ச.66i)

(ஜ.தே.ச.66m) (உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.ச.43m)

உத்தியோகபூர்வ வாக்கெடுப்புப் பத்திரமாகத் தோன்றக்கூடிய அல்லது கருதக்கூடியதொன்றை முறையான அதிகாரமின்றி அச்சிடல்.

(பா.தே.ச.66o) (மா.ச.தே.ச.66o)

(உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.ச.43m)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கெடுப்பு நிகழும் சந்தர்ப்பத்தில் வாக்காளர் தவறுதலாக புரிந்துகொள்ளக்கூடிய சின்னத்தை அல்லது பொருளை வைத்தல்.

(பா.தே.ச.66p) (மா.ச.தே.ச.66p) (ஜ.தே.ச.66p)
(உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.ச.43o)

வாக்கெடுப்பு நடைபெறும் சந்தர்ப்பத்தில் வாக்காளர் தொடர்பாக வைக்கப்பட்ட குறியீட்டை முறையான அதிகாரம் இன்றி வஞ்சகமாக சிதைத்தல்.

(பா.தே.ச.66q) (மா.ச.தே.ச.66q) (ஜ.தே.ச.66q)
(உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.ச.43o)

வாக்களிப்பதற்கு சட்டபூர்வமாக தகைமையற்றவரென அறிந்தும் வாக்களித்தல்.

(பா.தே.ச.66r) (மா.ச.தே.ச.66r)
(ஜ.தே.ச.66r) (உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.ச.இல்லை)

மேற்கூறிய தவறுகளும் வழங்கப்படும் தண்டனைகளில் மாற்றங்களும் சமமான தன்மைகளும் உண்டு.

பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் போது மேல் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்.

I. இரண்டு ஆண்டுகளுக்குக் குறைந்த சிறைத்தண்டனை
II. ஏழு ஆண்டுகளுக்குப் பிரஜா உரிமையை இல்லாதொழித்தல்
III. பாராளுமன்ற / மாகாண சபை உறுப்பினர்களாயின் மேற்படி உறுப்புரிமையை இழப்பர்.

மாகாண சபை தேர்தலின் போது இடம்பெற்ற தவறாயின் நீதவான் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளிப்பார்.

I. இரண்டு ஆண்டுகளுக்குக் குறைந்த சிறைத்தண்டனை
II. ஏழு ஆண்டுகளுக்குப் பிரஜா உரிமையை இல்லாதொழித்தல்
III. மாகாண சபை உறுப்புரிமையை இழப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்.

I. சுருக்கமான வழக்கு விசாரணையின் பின்னர் 500/= ரூபா அபராதம் அல்லது 6 மாதத்திற்குக் குறைந்த சிறைத்தண்டனை அல்லது இரண்டும்.

பிரஜா உரிமையை இழந்தவர் ஏழு ஆண்டுகள் கடக்கும் வரை வாக்களிக்க முடியாது.

- வேட்பாளரின் சார்பில் வாக்குக்கோர முடியாது
- வேட்பாளரின் முகவராக செயற்பட முடியாது
- தேர்தல் கூட்டங்களில் உரையாற்ற முடியாது. தேர்தல் ஒன்றில் எந்த வடிவத்திலும் பங்கு பற்ற முடியாது.

இவ்வாறு செய்தால் நீதவான் நீதிமன்றம் 1000/= ரூபா அபராதம் விதிக்கும் அல்லது 6 மாத சிறைத் தண்டனை அல்லது இவ்விரு தண்டனைகளும் விதிக்கப்படும்.
(பா.தே.ச.67) (ஜ.தே.ச.67) (மா.ச.தே.ச.67)
அரசியலமைப்பின் 81வது உறுப்புரைகளுக்கமைய அனைத்துத் தேர்தல்களுக்கும் இது ஏற்புடையது.

**வாக்கெடுப்பு தினத்தில் தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள**

வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பு நிகழ்த்தப்படும் தேதியில் அவ்விடத்திலிருந்து அரைக் கிலோ மீற்றர் தூர எல்லைக்குள் பின்வரும் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.
(பா.தே.ச.71) (மா.ச.தே.ச.71) (ஜ.தே.ச.71)
[உ.தே.ச.81a (5) 6 (7)] [ம.அ.வா.ச.49 (5) (6)]

## வேட்பாளர்கள் அல்லாத ஆட்களின் தேர்தல் நடவடிக்கைகள்

அச்சகத்தின் பெயர் வெளியீட்டாளரின் பெயர் முகவரி என்பன குறிப்பிடப்படாத பிரசார அறிவித்தல்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பவற்றை அச்சிடுதல், பிரசுரித்தல், விநியோகித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டுதல் என்பன வேட்பாளர் அல்லாத ஓர் ஆள் செய்யும் தவறுகளாகும். இத்தவறுகளுக்கு நீதவான் நீதிமன்றம் 500/= ரூபா அபாரதம் விதிக்க முடியும்.

மேற்படி அச்சகம் - வெளியீட்டாளர் என்பன குறிப்பிடப்படாமை இயல்பாகவே ஏற்பட்ட தவறாயின் அது நிரூபிக்கப்பட வேண்டும்.

முக்கிய குறிப்பு: வேட்பாளர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வாறு செய்வது சட்ட விரோத நடவடிக்கைகளின் கீழ் ஒரு தவறாகும். மேற்குறிப்பிட்ட 86வது உறுப்புரை ஏற்புடையதாகும்.
(பா.தே.ச.72) (மா.ச.தே.ச.72) (ஜ.தே.ச.72)
[உ.தே.ச.81b (1)] (ம.அ.வா.ச.48)

## தேர்தல் அலுவலகங்களின் எண்ணிக்கை

தேர்தல் அலுவலகங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று மத்திய அலுவலகம். ஏனையவை கிளை அலுவலகங்களாகும்.

ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு (Electoral District) ஒரு மத்திய அலுவலகம் அமையலாம். ஒவ்வொரு தேர்தல் பிரிவிலும் (Polling District) ஒரு தேர்தல் கிளை அலுவலகம் அமையலாம்.

மாகாண சபைத் தேர்தல்களைப் பொறுத்தவரை ஒரு நிர்வாக மாவட்டத்தில் ஒரு மத்திய தேர்தல் நிலையம் அமையும்.

## தேர்தல் பிரசார அலுவலகங்கள் செயற்படும் கால எல்லை

1. மத்திய தேர்தல் பிரசார அலுவலகம் நியமனப்பத்திரங்கள் ஒப்படைக்கப்படும் திகதியில் இருந்து ஆரம்பித்து வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு முதல் தினம் வரை மாத்திரம் செயற்படலாம்.

2. கிளை பிரசார தேர்தல் அலுவலகங்கள் வாக்கெடுப்பு தினத்திற்கு முதல் தினத்தில் இருந்து தேர்தல் தினத்தை உடன் அடுத்துவரும் தினம் வரை மாத்திரம் செயற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதற்கமைய இவ்விருவகை அலுவலகங்களும் ஒரே சமயத்தில் செயற்பட முடியாது. மாவட்ட அலுவலகங்களை மூடிய பின்ரே கிளை அலுவலகங்களை ஆரம்பிக்க முடியும்.

- இவ்வலுவலகங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கும் பிரதேசத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் அறிவித்திருக்க வேண்டும்.

- மேற்குறிப்பிட்ட வரையறைக்கு அமைய வேட்பாளரின் வீடு ஒரு தேர்தல் பிரசார அலுவலகமாகச் செயற்படலாம்.

மேற்படி சட்டங்களை மீறுதல் அல்லது மீறுவதற்கு முயற்சித்தல் தவறாகும். வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் அவசியமாகும். குற்றத்திற்கான தண்டனை 100/=ரூபா அபராதம் அல்லது ஒரு மாத கால சிறைத்தண்டனையாகும். இவ்விரு தண்டனைகளும் வழங்கப்படுவதற்கும் இடமுண்டு.

(பா.தே.ச.73) (மா.ச.தே.ச.73) (ஜ.தே.ச.73)
(உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.தே.ச.இல்லை)

அதே சமயம் வேட்பாளர் பயணிக்கும் வாகனத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக் காட்சிக்கு வைக்க முடியும்.

வேட்பாளருக்கு ஆதரவாக நடைபெறும் பகிரங்கப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் கூட்டம் நடைபெறும் தினத்தில் மாத்திரம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக் காட்சிக்கு வைக்க முடியும்.

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மாறாக தவறு செய்ய முற்பட்டால் பிடி ஆணை இன்றி கைதுசெய்யப்பட முடியும். இத்தவறுகள் அல்லது முயற்சிகள் பின்வருமாறு:

- வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் இரந்து கேட்டல்
- குறிப்பிட்ட வாக்காளரிடம் வாக்கைப் பரிந்து கேட்டல்
- ஏதேனும் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களிக்க வேண்டாமென எவரேனும் வாக்காளரைத் தூண்டுதல்

- அலுவலக முறையான அறிவித்தல்கள் எதனையும் தவிர்ந்த தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரம், சுவரொட்டி, வேட்பாளரின் புகைப்படம், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சை குழுவிற்கு குறித்தொதுக்கப்பட்ட சின்னம் எதனையும் விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல்.

தண்டனை: நீதவான் நீதிமன்றத்தில் சுருக்கமான விசாரணையின் பின்னர் குற்றம் நிரூபிக்கப்பட்டால் 100/= ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் அல்லது ஒரு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்படும். இவ்விரு வகைத் தண்டனைகளும் விதிக்கவும் இடமுண்டு.

## வாக்கெடுப்பு நிலையம் அருகே தவறான நடத்தைகள்

வாக்கெடுப்பு நிலையத்தின் எல்லைக்குள், வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருவோருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் கடமையாற்றுகின்ற அலுவலர்களுக்கு அல்லது ஏனையோரின் வேலையில் தலையிடும் வண்ணம்

- ஒலிபெருக்கியைப் பாவித்தல்
- சத்தம் போடுதல்
- ஒழுங்கீனமான முறையில் செயற்படுதல்

} தடைசெய்யப்பட்டுள்ளது

இத்தகைய தவறுகளுக்கும் மேலே குறிப்பிட்ட தண்டனைகள் விதிக்கப்பட முடியும்.

இத்தகைய நடவடிக்கைகளை தடுப்பதற்குப் பொலீசார் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். மேற்படி சட்டங்களை மீறுகைக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பொருட்களை கைப்பற்றவும் சட்டங்கள் மூலம் இடமளிக்கப்பட்டுள்ளது.

(பா.தே.ச.68) (மா.ச.தே.ச.68) (ஜ.தே.ச.68)
(உ.தே.ச.81a) (ம.அ.வா.தே.ச.44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்வலங்களை நடாத்துதல்

தேர்தல் ஒன்று தொடர்பாக நியமனப் பத்திரங்கள் ஒப்படைத்த திகதி முதல் ஊர்வலங்களை நடாத்துதல் அல்லது அதில் பங்குபற்றுதல் தடை செய்யப்பட்டுள்ளது. தேர்தலோடு தொடர்பு அற்ற மத சமூக நடவடிக்கைகள் பற்றிய ஊர்வலங்களை நடத்த முடியும். (உ+ம்: மேதின ஊர்வலம், பொசொன் பெரஹர என்பன.)

சட்டத்தை மீறினால் 1மாத சிறைத் தண்டனை அல்லது 100/= நூறு ரூபா அபராதம் விதிக்கப்படும். அல்லது இவ்விரு தண்டனைகளும் விதிக்கப்படலாம்.

(பா.தே.ச.69) (மா.ச.தே.ச.69) (ஜ.தே.ச.69)
[உ.தே.ச.81a (2)] (ம.அ.வா.ச.45)

## பொதுக்கூட்டங்களை நடாத்துதல்

தேர்தல் தினத்திற்கு 48 மணித்தியாலங்கள் முன்னரும் தேர்தல் நடந்து முடிந்து ஒரு வாரத்திற்குப் பின்னர் முடிவடையும் காலப்பகுதி வரை பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஒரு மாதச் சிறைத்தண்டனை அல்லது 100/= ரூபாவிற்கு மேற்படாத அபராதம் அல்லது இவ்விரு தண்டனைகளும் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.

(பா.தே.ச.70) (மா.ச.தே.ச.70) (ஜ.தே.ச.70)
(உ.தே.ச.81a2b) (ம.அ.வா.ச.46)

## மேற்கூறிய தவறுகளை செய்ய முயற்சித்தல்

மேற்குறிப்பிட்ட 5 உறுப்புரைகளில் (66-67-68-69-70ம் உறுப்புரை) குறிப்பிடப்படும் தவறுகளை புரிந்தாலும் மேற்படி தண்டனைகளே வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட உறுப்புரைகளின் தவறுகள் தொடர்பாக நீதிமன்ற பிடி ஆணை இன்றி கைது செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி தவறுகளுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்தால் மாத்திரமே வழக்கு தொடரப்படும் (கடந்த காலங்களில் இவ்வாறு முறையீடு செய்யப்பட்ட சில தவறுகள் தொடர்பாக வழக்குத் தொடர சட்டமா அதிபர் ஒப்புதல் வழங்கவில்லை.)

மேற்படி தவறுகளைச் செய்ய முயற்சிப்பதும் குற்றமாகும்.

நீதவான் நீதிமன்றத்தால் சுருக்கமுறை விசாரணையின் பின்னர் 500/= ரூபா அபராதமோ அல்லது 6 மாதச் சிறைத் தண்டனையோ அல்லது இருவகை தண்டனைகளுமோ விதிக்கப்படலாம்.

குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டுகளுக்கு வாக்குரிமை இல்லாதொழிக்கப்படும்.

(பா.தே.ச.76) (மா.ச.தே.ச.77) (ஜ.தே.ச.75)
(உ.தே.ச.76,77) (பொ.அ.வா.ச.51)

## II ஊழல் நடவடிக்கைகள்

பின்வரும் தவறுகள் தேர்தல் ஊழல் குற்றங்களாகக் கருதப்படும்.

**கள்ள வாக்குப் போடுதல்**

உயிர் வாழும் ஒருவரின் சார்பிலோ இறந்த ஒருவரின் சார்பிலோ தனிப்பட்ட முறையில் தோன்றியோ அல்லது அஞ்சல் மூலமோ வாக்களித்தல், தனது பெயரில் ஒரு தடவைக்கு மேல் வாக்களித்தல் கள்ள வாக்குப் போடுதல் ஆகும்.

- இத் தவறை இழைப்பதற்கு வாக்களித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை
- வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டு ஒன்றைக் கோருவது மூலம்,
- அஞ்சல் மூலம் வாக்களிக்கக் கோருவது மூலம்,
- அஞ்சல் வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதன் மூலம், **இத்தவறு முழுமையடையும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குற்றம் தொடர்பாக பிடியாணை இன்றி கைது செய்யப்பட முடியும்.
(பா.தே.ச.77) (மா.ச.தே.ச.78) (ஜ.தே.ச.76)
(உ.தே.ச.80) (ம.அ.வா.ச.52)

## உபசாரஞ் செய்தல்

- தேர்தலுக்கு முன்னர் அல்லது பின்னர் அல்லது தேர்தல் காலகட்டத்தில் வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிக்காது விலகியிருப்பதற்கு ஒரு நபருக்கு உபசாரஞ் செய்தல்.
- தான் நேரடியாகவோ அல்லது வேறு ஒரு நபர் மூலமோ அவ்வாறு உபசாரஞ் செய்வது தவறு. எவரேனும் ஆள் ஒருவரின் வாக்கைப் பெறுவதற்கோ அல்லது வாக்களிக்காது இருப்பதற்கோ உபசாரஞ் செய்வது தவறு.

## உபசாரஞ் செய்வதற்கு பின்வருவன உள்ளடங்கும்

- நேரடியாகவோ அல்லது வேறு மார்க்கமாகவோ உணவு, சிற்றுண்டி, அல்லது தின்பண்டத்தை கொடுத்தல் அல்லது வழங்கல்.
- இத்தகைய பண்டங்களைப் பெறுவதற்கு உத்தரவுச் சீட்டையோ அல்லது வேறு உபாயத்தையோ கையாளுதல்.
- இத்தகைய பண்டங்களை வழங்கியமைக்கான செலவை ஏற்பதற்கு உறுதியளித்தல்.
- இத்தகைய உபசாரத்தைச் செய்தல் அல்லது வழங்கல் அல்லது பெறுதல் அல்லது உபசாரத்தைப் பெறுவதற்கான உபாயத்தில் ஈடுபடுதல் என்பன உபசாரஞ்செய்தல் என்ற குற்றத்திற்கு ஏற்புடையது.

(பா.தே.ச.78) (மா.ச.தே.ச.79) (ஜ.தே.ச.77)
(உ.தே.ச.79) (ம.அ.வா.ச.53)

## தகாத செல்வாக்கு

வாக்குரிமையை சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கோ அல்லது பயன்படுத்தாமல் இருப்பதற்கோ வற்புறுத்தல் அல்லது தூண்டுதல்.

தேர்தல் ஒன்றின்போது வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதற்கு தூண்டுதல் அல்லது வற்புறுத்தல் மூலம் வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பது மூலம் நியாயமற்ற வகையில் வற்புறுத்த முடியும்.

இத்தகைய தவறுகளைத் தடுப்பதற்கு பொலிசார் தமது அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும். சுருக்கமான நீதவான் நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர் ஒரு மாதச் சிறைத்தண்டனை அல்லது 100/= ரூபாய் அபராதம் அல்லது இருவகைத் தண்டனைகளும் விதிக்கப்பட முடியும்.

மேற்படி பொருட்களைக் கைப்பற்றுவதற்கு அல்லது நீக்குவதற்கு பொலிசாருக்கு அதிகாரம் உண்டு.
(பா.தே.ச.74) (மா.ச.தே.ச.74)
(ஐ.தே.ச.74f) (உ.தே.ச.81b) (ம.அ.வா.ச.50)

## வாக்களிக்குமாறு வேண்டுதல்

நியமனப்பத்திரங்கள் ஒப்படைக்கப்பட்ட முதலாம் நாள் முதல் வாக்கெடுப்புத் தேதியை அடுத்து வரும் நாளன்று முடிவடையும் காலப்பகுதி வரை தேர்தல் வேட்பாளர் அல்லது அவரது குடும்ப அங்கத்தவர் (கணவன்-மனைவி-மகள்-மகன், மகனின் மனைவி, மகளின் கணவன்) பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவறு.

- வாக்குக் கோரி வீடுகளுக்குச் செல்லுதல்
- ஒரு கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ வாக்களிக்க வேண்டாமெனத் தூண்டுதல்
- தேர்தலில் வாக்களிக்க வேண்டாமெனத் தூண்டுதல்
- தேர்தல் பற்றிய துண்டுப் பிரசுரங்கள், அறிவித்தல்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், சின்னங்கள் என்பவற்றை வெளிக்காட்டுதல்.

இத்தவறு செய்யப்படும் பட்சத்தில் நீதவான் நீதிமன்றம் 100/= ரூபா அபராதம் அல்லது ஒரு மாதச் சிறைத்தண்டனை அல்லது இவ்விருவகைத் தண்டனைகளையும் வேட்பாளருக்கு விதிக்கும்.
(பா.தே.ச.75) (மா.ச.தே.ச.75)
(ஐ.தே.ச.75) (உ.தே.ச.இல்லை) (ம.அ.வா.ச.இல்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரகசியம் பேணுதல்

வாக்கெடுப்பு நிலையத்திற்கு, வாக்குகள் எண்ணப்படும் நிலையத்திற்கு வருகை தருவதற்கு முறையான அதிகாரம் பெறும் அலுவலர்கள், எழுதுவினைஞர்கள், முகவர்கள், வேட்பாளர்கள் இரகசியத் தன்மையை பேணும் பிரகடனத்தில் கையெழுத்திட வேண்டும்.

பின்வரும் தவறுகள் செய்யப்படமாட்டாது எனவும் மேற்படி பிரகடனத்தில் உறுதிப்படுத்தப்படும்.

- வாக்குச் சீட்டொன்றைக் கோரிய அல்லது கோராத ஒரு வாக்காளரின் பெயரை, இலக்கத்தை அல்லது அலுவலகச் சின்னத்தைப் பற்றிய குறிப்பிட்ட தகவலை வாக்கெடுப்பு முடியும் முன்னர் வெளியிடுதல்.

- மேற்கூறிய நபர் எந்த ஒரு வாக்காளர் எந்தக் கட்சிக்கு வாக்களிக்கப் போகின்றார்? எந்தக் கட்சிக்கு வாக்களித்தார்? என்ற விபரங்களை வாக்கெடுப்பு நிலையத்தில் பெற முயற்சித்தல்.

- ஒரு வாக்காளரிடம் வழங்கப்பட்ட வாக்குச் சீட்டின் இலக்கத்தைப் பற்றிய தகவலை குறிப்பிட்டதொரு நபருக்கு அறிவித்தல்.

- மேற்கூறிய நபர் வாக்கு எண்ணப்படுகையில் வாக்குச்சீட்டின் இலக்கத்தை அறிய முயற்சித்தல்.

- வாக்குச்சீட்டு மூலம் வாக்களித்த கட்சியை அல்லது குழுவைப் பற்றிய தகவல்களை எவருக்கேனும் வெளியிடுதல்.

- இச்சட்டத்தின் மூலம் அதிகாரம் பெற்ற வாக்கெடுப்பு நிலைய பொறுப்பதிகாரியோ அல்லது அப்பொறுப்பதிகாரியிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர் தவிர வேறு எவரும் வாக்காளர் வாக்கை வாக்குச் சீட்டுப் பெட்டியில் போட முன்னர் மேற்படி வாக்காளரோடு உரையாடுதல்.

தன்னால் அல்லது வேறு ஒருவர் மூலம் ஆள் ஒருவருக்கு அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மூலம் வேறு ஒருவருக்கு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

ஒரு தாக்கத்தை, வன்முறையை, இடையூறை அச்சுறுத்தலை நேரடியாகவோ அல்லது வேறு ஆள் மூலமோ செய்யலாம்.

இத்தாக்குதல்களின் லௌகீக அல்லது உளவியல் ஒடுக்குமுறை, நட்டம், பாதிப்பு, சாபம் செய்வதாக அச்சுறுத்தல், கடத்திச் செல்வதாக உணர்த்துதல் மூலம் சுதந்திரமான வாக்களிப்பிற்குத் தடை ஏற்படுகின்றது.

2. வேட்பு மனுக்களை கையேற்று முடிந்த தினத்திலிருந்து தேர்தல் நடைபெறும் தினம் முடிவடையும் வரையில் குறிப்பிட்டதொரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களிக்குமாறு அல்லது வாக்களிக்காது விலகியிருக்கத் தூண்டுவதற்கு ஒரு சமயப்பணித்துறைக் கூட்டமொன்றில் ஏதேனும் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு ஆதரவளிக்க அல்லது ஆதரவளிக்காது விலகியிருக்கத் தூண்டுதல். இத்தகைய சமயப்பணித்துறைக் கூட்டத்தில் தேர்தல் பற்றிய துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், சின்னங்கள், கொடிகள் காட்சிக்கு வைத்தல். அல்லது ஏதேனும் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு ஆதரவாக புனித தலத்தில் பொதுக்கூட்டமொன்றை நடாத்துதல் தவறான வற்புறுத்தலாகும்.

3. தேர்தல் காரணங்களை முன்னிட்டு ஆத்மீகத் தொண்டு அல்லது சேவை அளிக்க மறுத்து அச்சுறுத்தல். அல்லது இச்சமயத்திலிருந்து வெளியேற்றுவதற்காக அச்சுறுத்தல் தவறான வற்புறுத்தலாகும்.

4. குறிப்பிட்டதொரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களித்தமையால் அல்லது வாக்களிக்காமல் விலகியிருந்தமையால் தொழில் தருநர்

- தொழிலை முடிவுறுத்துகின்ற அல்லது முடிவுறுத்தப் போவதாக பயமுறுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழிலில் ஈடுபட்டிருக்கையில் அனுபவித்த அல்லது அனுபவித்திருக்கக் கூடிய ஏதேனும் நன்மைகளை நலஉதவிகளை - சேவைகளை மறுத்தல் அல்லது மறுக்கப்போவதாகப் பயமுறுத்தல் தகாத செல்வாக்காகும்.

(பா.தே.ச.79) (மா.ச.தே.ச.80) (ஜ.தே.ச.78)
(உ.தே.ச.81) (ம.அ.வா.தே.ச.54)

## இலஞ்சம் வழங்கல்

- வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிப்பில் இருந்து விலகியிருப்பதற்கு வழங்கும் கொடுப்பனவு இலஞ்சமாகும். அது மறைமுகமாக வழங்கப்படுவதாக அமையலாம். அல்லது வாக்காளரின் சார்பாக வேறு ஆளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவாகவும் அமையலாம்.

- இவ்வாறு வழங்கப்படும் பணம், கடன் அல்லது வேறு பொருளாக அமையலாம். அவ்வாறு வழங்குவதற்கு உறுதிகூறல், அல்லது வழங்க முயற்சிப்பதாக உறுதியளித்தல் இலஞ்சம் வழங்குவதாகும்.

- இவ்வாறாக வழங்குவதற்கு உறுதியளிக்கும் பொருள் ஒரு பதவியாக, அந்தஸ்தாக, தொழிலாக அமையலாம். வாக்களித்தமையால் அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமையால் இவ்வாறு செய்வதும் இலஞ்சமாகும்.

- இவ்வாறு வழங்கும் பொருள் (நேரடியாகவோ மறைமுகமாகவோ) பரிசாக, கடனாக, யோசனையாக, உறுதிமொழியாக, கொடுப்பனவாக, உடன்படிக்கையாக அமையலாம். இத்தகைய வழங்கல் அல்லது வழங்குவதற்கான உறுதிமொழி தவறாகும்.

- இலஞ்சமாக செலவு செய்யும் நோக்கில் முன்கூட்டியே பணம் வழங்குவதும் தவறாகும்.

## இலஞ்சமாகப் பெறும் வாக்காளரும் குற்றவாளியாவார்

தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தல் இடம்பெறுகையில் ஏதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவை இலஞ்சமாகப் பெற உடன்படுதல் உடன்படிக்கை செய்தல் மூலம் வாக்காளரும் இலஞ்சம் பெறும் தவறைச் செய்கிறார்.

மேலே குறிப்பிட்டவாறு இலஞ்சம் பெறல், அல்லது வேறு ஒரு நபர் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ கோருதலும் இலஞ்சக் குற்றமாகும்.

மேற்கூறியவாறு இலஞ்சம் வழங்குவதற்கு அல்லது பெறுவதற்கு முயற்சிப்பதாக உறுதியளிப்பவரும் இலஞ்சம் வழங்கும் தவறு செய்தவராவார்.

(பா.தே.ச.80) (மா.ச.தே.ச.81)
(ஜ.தே.ச.79) (உ.தே.ச.79) (ம.அ.வா.ச.55)

## ஊழல் / மோசடி பற்றிய தண்டனைகள்

கள்ளவாக்குப் போடுதல், கள்ளவாக்குப் போடுவதற்கு உதவுதல், உபசாரஞ் செய்தல், தகாத செல்வாக்கு, இலஞ்சம் வழங்கல். ஒருவரின் சரிதைக்கு சேறு பூசுதல், வேட்பாளர் ஒருவர் இராஜினாமா செய்வதாகப் பொய்ப் பிரசாரம் செய்தல் என்பன தேர்தல் ஊழல் / மோசடி பற்றி தண்டனை விதிப்பதற்கான குற்றங்களாகும்.

- இவை தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படும்.
- வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் அவசியமாகும்.
- குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் ஏனைய தண்டனைகளுக்கு மேலதிகமாக 7 ஆண்டுகள் பிரஜா உரிமை இல்லாதொழிக்கப்படும். ஏற்கனவே மக்கள் பிரதிநிதியாகப் பதவி வகித்தால் அப்பதவி செல்லுபடியற்றதாகும்.

(பா.தே.ச.82) (மா.ச.தே.ச.81)
(ஜ.தே.ச.79) (உ.தே.ச.79) (ம.அ.வா.ச.56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III சட்ட விரோதச் செயல்கள்

தேர்தலின்போது செய்யப்படும் சில கொடுப்பனவுகள் அல்லது செலவுகள் சட்ட விரோதமானவையாக இப்பகுதியில் கருதப்படும்.

- வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பயணிப்பதற்கு எவ்வகையிலேனும் போக்குவரத்துக் கட்டணங்களைச் செலுத்துதல் அல்லது செலுத்துவதற்கு உடன்படுதல் சட்ட விரோதமாகும்.

- அறிவித்தல்களை காட்சிக்கு வைப்பதற்கு அல்லது அதற்கான ஓரிடத்தைப் பாவிப்பதற்கு வாக்காளருக்கு ஒரு கொடுப்பனவை வழங்குதல் அல்லது அதற்கான உடன்பாடு செய்து கொள்ளுதல் சட்ட விரோதமாகும்.

- தேர்தலுக்கு முன்னர் அல்லது பின்னர் அல்லது இடைக்காலத்தில் ஒரு கொடுப்பனவை வழங்குதல் அல்லது உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல். கொடுப்பனவைப் பெறுதல் உடன்படிக்கையின் ஒரு தரப்பினராதல், சட்ட விரோதமாகும்.

- வாக்கெடுப்பிற்கு ஒரு மணித்தியாலம் முன்னரோ அல்லது வாக்கெடுப்பின் பின்னர் ஒரு மணி நேரத்திற்குப் பின்போ அல்லது அதன் இடைக்காலத்திலோ வாக்கெடுப்பு நிலையத்திற்கோ அல்லது வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தோ வாக்காளர்களைப் போக்குவரத்துச் செய்வதற்கு உதவுதல் குற்றமாகும். சட்டரீதியாகவோ உத்தியோகபூர்வமான நடவடிக்கையையோ மேற்கொள்ள முடியும்.

**மேற்படி நடவடிக்கைகள் சட்ட விரோதமல்லாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு:**

ஒரு வாக்காளர் தனது தொழில் முயற்சி நிமித்தம் பத்திரங்களை பிரசார அறிவித்தல்களை காட்சிப்படுத்தல் சட்ட விரோதமாக மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆற்றின் ஊடாக அல்லது கடல் ஊடாகச் செல்லாமல் வாக்களிக்க முடியாத சந்தர்ப்பங்களில் வாக்காளர்கள் கடலின் ஊடாகவோ ஆற்றின் ஊடாகவோ கடந்து செல்ல சந்தர்ப்பம் வழங்கலாம்.

- பொது போக்குவரத்துச் சேவை ஊடாக தனது சொந்தச் செலவில் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பயணித்தல் சட்ட விரோதமாகாது.

- வாக்கெடுப்புத் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்பாக தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடம் பெற்ற எழுத்திலான அனுமதி மூலம் வலதுகுறைந்த ஒரு வாக்காளரை வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பயணிக்கவும் திரும்பவும் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தலாம். (ஆனால் வேட்பாளர் ஒருவர் வாக்காளர் சார்பில் இவ்வனுமதியைக் கோர முடியாது.)

- சட்ட விரோதமான முறையில் போக்குவரத்துச் செய்கையில் நேரடியாகவோ அல்லது ஒரு முறையீட்டின் மூலமோ பொலிஸ் அலுவலர் ஒருவர் குறிப்பிட்ட வாகனத்தைக் கைப்பற்றி வாக்கெடுப்பு முடியும் வரை அரச பொறுப்பில் அவ்வாகனத்தை வைத்திருக்க மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

(பா.தே.ச.83) (மா.ச.தே.ச.84)
(ஜ.தே.ச.82) (உ.தே.ச.81c) (ம.அ.வா.ச.57)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யான கூற்றுக்களைப் பிரசுரித்தல்

ஏதேனும் பத்திரிகை, சஞ்சிகை, துண்டுப்பிரசுரம், வெளியீடு மூலம் பொய்யான கூற்றைப் பிரசுரித்தல் இதன் மூலம் கருதப்படுகிறது.

இப்பொய்யான கூற்று குறிப்பிட்ட தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின், சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளரின் தேர்தல் பற்றிய உரைகளாகவோ அல்லது நடவடிக்கைகளாகவோ அமையலாம்.

இப்பொய்யான கூற்று தேர்தல் பெறுபேறுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

இத்தகைய கூற்றைப் பிரசுரிக்கும் அச்சக உரிமையாளர், முகாமையாளர், பதிப்பாசிரியர் அல்லது எழுத்தாளர் பொறுப்பை ஏற்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொருவரும் அதற்குத் தாம் பொறுப்பல்ல என்பதை காரணகாரியங்களுடன் நிரூபித்து விடுதலை பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

නිදහස් හා සාධාරණ මැතිවරණයක් සඳහා වූ ජනතා ව්‍යාපාරය
நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்
Campaign for Free & Fair Elections
CaFFE

No. 100/19
Welikadawatte Road, Rajagiriya
Tel: 060 2188106, E-mail: caffe2008gmail.com
Fax: 0112 866224

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org